செய்தி வெளியீடு எண்: 194/2018 நாள் : 06.04.2018

**வேலூர் மாவட்டம் ஏலகிரி மலை கோடை விழா 2018 வருகின்ற மே மாதம் மூன்றாவது வாரத்தில் சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது!**

**ஜோலார்ப்பேட்டை ஏலகிரி மலை கோடை விழா 2018-ஐ சிறப்பாக நடத்துவதற்கு அனைத்துத் துறை அலுவலர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத் துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது!!**

வேலூர் மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் ஜோலார்ப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் ஏலகிரி மலையில் 2018 ஆம் ஆண்டிற்கான கோடை விழா வருகின்ற மே மாதம் மூன்றாவது வாரத்தில் சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது. இவ்விழாவிற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்து துறை அரசு அலுவலர்களுடன் ஆலோசனை கூட்டம் வேலூர் மாவட்டம் ஏலகிரி மலை யாத்ரி நிவாஸ் அலுவலக கூட்டரங்கில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத் துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத் துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்கள் தெரிவித்தாவது:-

வேலூர் மாவட்டத்திலுள்ள ஏலகிரி மலையில் வருடந்தோறும் நடத்தப்படும் கோடை விழா இந்த ஆண்டு மே மாதம் மூன்றாவது வாரத்தில் சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது. இவ்விழாவில் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு கோடை விழாவினை சிறப்பிக்க உள்ளார்கள். ஆகவே இவ்விழாவில் மேற்கொள்ளப்பட வேண்டிய கலை நிகழ்ச்சிகள், போக்குவரத்து வசதிகள், பாதுகாப்பு வசதிகள், சுகாதார வசதிகள் மற்றும் பொதுமக்கள் கண்டுகளிக்கும் வகையில் பல்வேறு சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளது. ஆகவே சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்படும் பணியினை சிறப்பான செய்திட வேண்டும்.

வருவாய் மற்றும் ஊரக வளர்ச்சி துறை அலுவலர்கள் கலை நிகழ்ச்சிகளின் முன்னேற்பாடு பணிகளையும், காவல் துறையினர் பாதுகாப்பு பணிகளையும், மகளிர் திட்ட அலுவலர்கள் அரங்குகள் அமைக்கும் பணிகளையும், வேளாண் துறை அலுவலர்கள் மலர் கண்காட்சி, வேளாண் பொருட்கள் கண்காட்சி பணிகளையும், கால்நடை துறை அலுவலர்கள் நாய்கள் கண்காட்சி பணிகளையும், வட்டார போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக அலுவலர்கள் பொதுமக்கள் கோடை விழாவிற்கு வந்து செல்லும் வகையில் போக்குவரத்து வசதிகளையும், பொது சுகாதார மருத்துவர்கள் பொதுமக்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை வசதிகளையும், நகராட்சி மற்றும் ஊராட்சி துப்புறவு பணியாளர்கள் சுகாதார மற்றும் குடிநீர் வசதிகளையும், மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் உள்ள பொதுமக்கள் அறிந்து கொள்ளும் விதமாக செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பாக விளம்பரப்படுத்திடவும் மற்றும் அனைத்து துறை அலுவலர்களும் தங்களின் துறைகளின் சார்பாக செயல்படுத்தப்படும் பணிகள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் கண்காட்சியை அமைத்திட வேண்டும். மேலும் கோடை விழா மிகவும் சிறப்பாக நடைபெற அனைவரும் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகளை உடனடியாக தொடங்கிட வேண்டுமென்று மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத் துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சார் ஆட்சியர் (திருப்பத்தூர்) செல்வி.பிரியங்கா, இ.ஆ.ப., மாவட்ட வன அலுவலர் (திருப்பத்தூர்) திரு.தேஜஸ்வி, இ.வ.ப., துணை காவல் கண்காணிப்பாளர் திரு.ஜேசுராஜ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திரு.பிச்சாண்டி (வளர்ச்சி), மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ச.இளங்கோ, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.ஜி.ரமேஷ், முன்னாள் ஒன்றியக்குழுத் தலைவர் திரு.ரமேஷ், அனைத்து வட்டாட்சியர்கள், நகராட்சி ஆணையாளர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர்-9.